**<u>Sub Court, Eraniel</u>**

**O.S. No.11/2022**

**Date**: 12.09.2024.

வா.சா.1- திரு. அசிலர்.

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

<u>1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நஷ்டஈடு கேட்டு நான் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கை போன்றே மதுரை உயர்நீதிமன்ற கிளையில் WP.No.22630/2017 தாக்கல் செய்து இருந்தேன் என்றால், சரிதான். அந்த Writ petition ல் நான் கேட்ட பரிகாரம் வழங்கப்படவில்லை என்றால், சரிதான். அந்த உத்தரவுக்கு எதிராக நான் Writ appeal எதுவும் தாக்கல் செய்யவில்லை. இந்த வழக்கில் நான் குறிப்பிட்டுள்ள புகார்கள் 2017 ல் நடந்தது. 2017 முதல் 5 ஆண்டுகள் கழித்து தான் இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கிறேன் என்றால், சரிதான். 1ம் பிரதிவாதி தமிழ்நாட்டைச் சேர்ந்தவர் அல்ல என்றால், சரிதான். அவர் மத்திய அரசால் தேர்வாணையம் மூலம் தேர்வு பெற்று நேரடியாகத் தேர்வு செய்யப்பட்டு குளச்சல், உட்பிரிவில் பணியில் சேர்ந்தார் என்றால், சரிதான். அவருக்கு நான் முதல் விசாரணையில் குறிப்பிட்டிருக்கும் சில வட்டார வழக்குச் சொற்கள் தெரியாது என்றால், சரியல்ல. இந்த வழக்கில் ஒரு பட்டிகைச் சொத்தை குறிப்பிட்டிருக்கிறேன். அது எனது மனைவியின் பெயரில் இருக்கிறது. 07.08.2017 அன்று 1ம் பிரதிவாதி அலுவலகத்தில் இருந்து அழைப்பு எனக்கு 04651226227 என்ற லேண்லைனில் போன் கால் வந்தது. நான் அன்றைய தினம் விசாரணையை முடித்து விட்டு இரணியல், காவல் நிலையத்தில் இரவு 08.15 மணிக்கு ஆஜரானேன். அன்றைக்கு என்னுடன் என் மனைவியும் வந்திருந்தார் என்றால், சரியல்ல. இந்த விசாரணை முடிந்த பிறகு எனது மனைவி 08.08.2017 அன்று இரணியல் ஆய்வாளர்/ 5ம் பிரதிவாதியிடம் ஒரு புகார் கொடுத்திருந்தார் என்றால், சரியல்ல. தற்போது என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையெழுத்து என்னுடைய மனைவியின் கையெழுத்து தான். அந்த புகாரில், இந்நிலையில் எனது கணவர் மீது பொய்யான புகார் மனு குளச்சல் காவல் உதவிக் கண்காணிப்பாளரிடம் அளித்துள்ளார், அது குறித்து விசாரணைக்கு எனது கணவர் 08.08.2017 அன்று ஆஜராகி வந்தார்

என்று குறிப்பிட்டுள்ளார் என்றால், சரிதான். இந்த புகார் மனுவில் என்னுடைய மனைவி காவல் துறை அதிகாரிகளான/1, 3, 5 பிரதிவாதிகள் என்னிடம் முறைகேடாக நடந்ததாக எனது மனைவி குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றால், அது பற்றி எனக்கு நினைவில் இல்லை. சாட்சியிடம் அந்த புகாரை படித்துப் பார்த்து அவ்வாறு குறிப்பிட்டிருக்கிறாரா என்று கூறும் படி கேட்ட போது, அவ்வாறு குறிப்பிடவில்லை என்று சொல்கிறார். உண்மையில் 07.08.2017 அன்று 1, 3 மற்றும் 5 பிரதிவாதிகள் என்னிடம் முறைகேடாக நடந்திருந்தால் அது பற்றிய உண்மைகள் இந்த புகாரில் குறிப்பிடப்பட்டிருக்கும் என்றால், சரியல்ல. அந்த புகார் மனு பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதே போன்று நானும் 08.08.2017 அன்று 1 ம் பிரதிவாதிக்கு புகார் மனு ஒன்று அனுப்பியிருக்கிறேன் என்றால், சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் அந்த புகார் மனுவில் மேற்படி நபர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டிருக்கிறேன். இந்த புகாரிலும் குளச்சல் காவல் அதிகாரிகளுக்கு 3, 5 பிரதிவாதிகளுக்கு எதிராக அத்து மீறி நடந்ததாக, குறிப்பிட்டு புகார் கொடுக்கவில்லை என்றால், சரிதான். அந்த புகார் மனு பி.வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. இவ்வாறு நானும் எனது மனைவியும் கொடுத்த 2 புகார்களிலும் 1, 3 மற்றும் 5 பிரதிவாதிகள் அத்து மீறி நடந்ததாக குறிப்பிட்டு புகார் கொடுக்கவில்லை என்றால், சாட்சி பதில் ஏதும் கூறவில்லை. உண்மையிலேயே அவ்வாறு விசாரணையில் சம்பவங்கள் நடந்திருந்தால் அவற்றைப் பற்றி எனது புகாரில் குறிப்பிட்டிருப்பேன் என்றால், சாட்சி கேள்விக்கு சம்மந்தமில்லாமல் வேறு ஏதோ பதில் கூறுகிறார். மீண்டும் உயர் நீதிமன்றத்தில் Crl.OP/No.11143/2017 வழக்கு தாக்கல் செய்து எனக்கு உரிய பாதுகாப்பு வேண்டும் என்று நான் கேட்டிருந்தேன். அதே போன்று எனது மனைவியும் இவ்வாறு பாதுகாப்பு கோரி மனு செய்திருந்தார் என்றால், சரிதான். அந்த 2 வழக்குகளும் உயர் நீதிமன்றத்தில் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால், சரியல்ல. தள்ளுபடி செய்யப்பட்ட வழக்குகளை வேண்டும் என்றே நான் உண்மைக்கு புறம்பாக தள்ளுபடி செய்யவில்லை என்று குறிப்பிடுகிறேன் என்றால் சரியல்ல. உயர் நீதிமன்றத்தில் 1ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்ட Writ appeal No.105/2022 ல் Stay வழங்கப்பட்டுள்ளது என்றால், அது விபரம் எனக்கு நினைவில் இல்லை. அவ்வாறு Stay வழங்கப்பட்டுள்ள நிலையில் இந்த

வழக்கினை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய எனக்கு உரிமை இல்லை என்றால், சரியல்ல.

(நேரமின்மை காரணமாக குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
இரணியல்.